# ஒப்பியல் நோக்கில் காதா சப்தசதி நாலடி உணர்த்தும் அறம்

**முனைவர் பெ. சுமதி**
*உதவிப் பேராசிரியர், ஒப்பிலக்கியத் துறை*
*தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்*
*மதுரை*

சங்க இலக்கியங்கள் எனப்படும் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் செவ்வியல் இலக்கியங்கள் வரிசையில் வைத்து போற்றப்படுகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்களின் காதல் வாழ்க்கையை "சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாஅர்" என்ற கட்டமைப்புடன் எடுத்தியம்புவது சங்க இலக்கியத்திற்குரிய தனிச்சிறப்பாகும். சங்க இலக்கியம் போன்றே சங்க காலத்தைச் சேர்ந்த ஆந்திரநாட்டு அகஇலக்கியம் என்று அழைக்கப்படும் காதா சப்தசதியில் திணைத்துறை பாகுபாடுஇல்லை என்றாலும் "சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாஅர்" என்ற கட்டமைப்புடன் காணப்படுகின்றது. அக வாழ்க்கையை எடுத்துரைக்கும் காதா சப்த சதி பாடல்களில் கவிக் கூற்றுக்கள் காணப்படுகின்றன. அந்தக் கவிக் கூற்றுக்கள் மக்களை நல்வழிப்படுத்துவதற்காகவும் சமுதாயத்தைச் செம்மைப்படுத்துவதற்காகவும் அறக்கருத்துக்களை எடுத்துரைக்கின்றன. சங்க இலக்கிய அறக்கருத்துக்களைக் காதா சப்த சதியுடன் பொருத்திப் பார்ப்பதைவிட அறஇலக்கியங்களுடன் பொருத்திப்பார்த்தால் சிறப்பாக இருக்கும் என்ற காரணத்தால் பதினெண் கீழ்கணக்கு நூல்களில் ஒன்றாகக் குறிப்பிடப்படும் சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நாலடியின் அறக்கருத்துக்கள் காதா சப்தசதியின் அறக்கருத்துக்களுடன் ஒப்பிட்டு ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**அறம் தோற்றம்**

மனிதன் ஆரம்பத்தில் காடுகளில் விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்தவன். காலப்போக்கில் விலங்குகளிடமிருந்தும் இயற்கையிடமிருந்தும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள கூட்டமாக வாழ முற்படுகின்றான். கூட்டமாக வாழும் சூழ்நிலையில் அந்தக் கூட்டத்திற்கு கட்டமைப்பு தேவைப்படுகின்றது. அந்தக் கட்டமைப்பிற்குச் சில பழக்க வழக்கங்கள் வரையறை செய்யப்படுகின்றன.

"குழு, குழுவாகக் கூட்டம், கூட்டமாக வாழ வேண்டியது அவனது உயிர்ப் பாதுகாப்பிற்கு கட்டாயத்தேவையாயிற்று. குழுவாழ்வும், கூட்டவாழ்வும் ஒருவரை ஒருவர் அனுசரித்துப் போகவும், அரவணைத்துப் போகவும் வற்புறுத்தின. இதன் விளைவாக மனிதர்கள் இடையே அறங்கள் கருக்கொண்டிருத்தல் வேண்டும். இவ் அறங்கள் எறும்பு வரிசையாகச் செல்லுதலைப் போலத் தேனீ ஒரே கூட்டில் ஒத்து வாழ்வதைப் போல மொழி கண்டுபிடிக்காமுன் மௌனமாகக் கடைபிடிக்கப் பட்டிருத்தல் வேண்டும். பழமொழிகள், முதுமொழிகள் என்ற தொல்காப்பியச் சொல்லிடு முதியோர் சொல்லி வந்த அறமொழி என்பதையும் அது தலைமுறை தலைமுறையாகச் சொல்லப்பட்டு வந்தது என்பதையும் தெரியப்படுத்துகிறது." (க.ப அறவாணன், அற இலக்கியக் களஞ்சியம் ப.31)

கூட்டமாக வாழ்ந்த மக்கள் தங்களுக்குள் விட்டுக்கொடுத்து போகக்கூடிய சூழ்நிலையில் அறங்கள் உருவாகியிருக்கலாம் என்றும் பழமொழிகள், முதுமொழிகள், அறமொழியாகவும் தலைமுறை, தலைமுறையாகச் சொல்லப்பட்டு வந்தன என்பதை அறியமுடிகின்றது.

மக்களிடையே பல தலைமுறைகளாகச் சொல்லப்பட்டு வந்த பழமொழிகள் அரச அறங்களாகவும் சமய அறங்களாவும் உருமாற்றம் பெற்றன என்பது குறிப்பிடப்படுகின்றன.

"பொதுமக்கள் இடையே முன்னொரு காலத்தில் புழக்கத்தில் இருந்த பழமொழிகள் அரச அறங்கள் ஆயின. காலப்போக்கில் அரசும், அரசனும் தோன்றியவை போலச் சமயமும். சமயவாணரும் தோன்றியிருத்தல் வேண்டும். தொடக்க காலத்தில். அரசன் தீர்ப்பளிக்கும் நீதிபதி தண்டனையை நிறைவேற்றும் காவலன் வழிபடத் தகும் கடவுள் வாணன் என்ற அனைத்து

நிலைகளும் அரசர் ஒருவரிடமே குவிந்திருந்தன. இதில் முதல் பகிர்வு சமயத் தோற்றமும் சமய வாணர் தோற்றமும் ஆகும். இதுவும் கூட அரசரின் அங்கமாகவே தோன்றிப் பின்னர்த் தனியே பிரிந்திருத்தல் வேண்டும். அரசை ஆளும் குழுவான ஐம்பெருங்குழு, எண்பேராயம் ஆகியவற்றில் சமயப் பிரதிநிதியாகப் புரோகிதர் இடம்பெற்றிருந்தமை கவனிக்கத்தக்கது. எனவேதான் சமயம், எப்போதும் அரசைத் தழுவியதாகவும் இருந்த வந்தது. சமயம் மெல்ல, மெல்லத் தனி உரிமையையும், தனி வாழ்வையும் எய்தத் தொடங்கியபோது சமய அறங்கள் முளைத்தன அரசையே அரச வம்சத்தினர் புறக்கணித்து வெளியேறிய போது அரசுகளுக்கு மேலாகச் சமயம் மேல் அதிகாரத்தை எய்தியது. மகாவீரர் என்ற இளவரசர் அரசைவிட்டு வெளியேறிச் சைன தர்மங்களை உபதேசித்தார், பரப்பினார். சித்தார்தர் அரசர் குடும்பத்தில் இருந்து வெளியேறிப் புத்தராகிப் பௌத்த தருமத்தை உபதேசித்தார், பரப்பினார். மகாவீரரையும் புத்தரையும் பின்பற்றி அரசக் குடும்பத்தினர் பலர் அத்தருமங்களுடன் தம்மை இணைத்துக் கொண்டனர். சமயங்கள் தோன்றியபோது சமய வளர்ச்சிக்காகவும் நிலைப்பாட்டிற்காகவும் சமயஅறங்கள் பரிணமித்ததும் காலப்போக்கில் சமயத்தை வரித்தும் கொண்ட அரசர்கள் அவற்றைச் சட்டமாக்கியதும் அறக்கருத்துகளின் பரிணாம வரலாறு ஆகும்.'' (க.ப அறவாணன், அறஇலக்கியக் களஞ்சியம் ப.32) தலைமுறை, தலைமுறையாகப் பின்பற்றப்பட்டு வந்த அறம் காலப்போக்கில் அரசுகளால் அவற்றைச் சட்டமாக்கியதை அறிமுடிகின்றது.

**அறம் விளக்கம்**

''அறம் என்ற சொல், ''அறு'' என்னும் வினைச்சொல் அடியாகப் பிறந்தது எனலாம். ''அறு'' என்றும் அடிச்சொல்லிற்கு அறுத்துச்சொல், வழியை உண்டாக்கு, உருவாக்கு, வேறுபடுத்து, துண்டி, வரைமுறைப்படுத்து எனப் பல்பொருட்கள் வழங்கி வருகின்றன. அம், எனும் தொழிற்பெயர் விகுதி அறுத்தலாகிய தொழிலை உணர்த்துகிறது.'' (க.த.திருநாவுக்கரசு, திருக்குறள் நீதி இலக்கியம், ப.23) என்று அறம் என்ற சொல்லிற்கு விளக்கம் தரப்படுகின்றது.

மனிதர்களிடையே தோன்றுகின்ற முரண்பட்ட சிந்தனைகளை வரையறை செய்து நல்வழியில் கொண்டு செல்வதற்கு அறச்சிந்தனைகள் வகுக்கப்பட்டன என்பதை,

''மக்களினம் உருவாக்கும் சிக்கலான நிலையங்களும், அமைப்புகளும் வளர்ச்சியுறுகின்ற பொழுது அவற்றிடையே முரணான இயல்புகளும் பண்புகளும் தோன்றுகின்றன, வளர்ச்சியும் மாற்றமும் அடைகின்றன. இத்தகைய பல திறப்பட்ட விருப்புகளையும், வெறுப்புகளையும், தேவைகளையும் முரண்பட்ட எண்ணங்களையும் கருத்துகளையும் தன்னகத்தே கொண்டு, அவற்றிற்குச் செம்மையான முழுவடிவம் கொடுக்கும் பணியைச் செய்வதே தமிழன் கண்ட அறத்தின் உள்ளார்ந்த பண்பாக இருந்துவருகிறது.'' (க.த.திருநாவுக்கரசு, திருக்குறள் நீதி இலக்கியம், ப.24) என்று குறிப்பிடப்படுகின்றது.

மேலும் அறம் என்ற சொல்லிற்குப் பல்வேறு வகையான விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன.

'அறம்' என்னும் சொல்லிற்குத் தமிழில் எட்டு வகையான பொருள்கள் வழங்கி வருகின்றன. பொதுவாக அது நற்பண்பு அல்லது ஒழுக்கம் என்னும் பொருளிலேயே பெரும்பாலும் தமிழ் இலக்கியங்களில் வழங்கப் பெற்றிருப்பதை நாம் காணுகின்றோம். அறம் உணர்த்தும் இப்பொருள் அறிவியல் சொற்பொருள் வகையைச் சேர்ந்ததாகும். இப்பொருளில் மட்டுமல்லாமல் வழக்கம், நீதி, கடமை, புண்ணியம், ஈகை, அறக்கடவுள், சமயம் என்ற பல்வேறு பொருள்களிலும் அறம் என்னும் சொல் வழங்கப்பட்டு வருகிறது.'' (க.த.திருநாவுக்கரசு, திருக்குறள் நீதி இலக்கியம், ப.24)

அறம் என்ற சொல் தமிழ் இலக்கியங்களில் நற்பண்பைக் குறிக்கப் பயன்படுகின்றது என்பதை அறிவோம். ஆனால் அவை எட்டு வகையான பொருளில் வழங்கப்படுகின்றது என்ற கருத்து முன் வைக்கப்படுவதை அறியமுடிகின்றது.

**நிலையாமை**

மனிதன் வாழ்க்கை நிலையில்லாதது. மனிதனின் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் எண்ணப்படுகின்றன என்பதை,

**“நின்ற உயிரோ நிலையற்றதுவே**
**சென்ற இளமை திரும்பியும் வாரா**
**இன்றுபோல் மறுநாள் இருப்ப தில்ல**
**துன்றுமிவ் வுலகிற் கொடுமைகளேனோ” (காதா.3-47)**

என்று கூறப்படுகின்றது. மனிதன் தன் வாழ்க்கையில் அனுபவிக்கின்ற இளமை நிலையில்லாதது. குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு முதுமை தானே வந்து உடம்பில் குடியேறிவிடும். உடம்பில் உள்ள உயிரும் ஒரு நாள் இந்த உடம்பை விட்டு வெளியேறிவிடும். ஒரு நாளைப் போல் மற்றொரு நாள் அமைவதில்லை. இது எல்லோருடைய அனுபவத்திலும் உண்டு, அவ்வாறிருக்க பின்பு ஏன் மக்கள் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் அடிமைப்படுத்தியும் கொடுமை செய்தும் அமைதியிழந்து வாழ்கின்றார்கள். இந்த உலகத்தில் வாழக்கூடிய சிறிது நாளிலேனும் மக்கள் அமைதியுடனும் அன்புடனும் வாழ வேண்டும் என்ற அறச்சிந்தனையை இக் காதா பாடல் வழி அறியமுடிகின்றது.

சாதவாஹனனின் வெற்றியைப் போற்றிப் புகழும் கவி, சாலிவாஹனனிடம் தோற்றோடிய எதிரிகளின் பெண்கள் நிலையைப்பற்றிக் கூறும்போது நிலையாமைக் கருத்தை எடுத்துரைக்கின்றார்.

**“எட்டரும் மாங்கனி கண்டழும் மதலை**
**வேண்டிடநின் எதிரியின் விளங்கிழை யாளே**
**பயணிகள் யாரைப் பார்த்தா லும்அது**
**கொய்து தருகெனக் குறையிரந் தாளே” (காதா.6-95)**

சாதவாஹன மன்னனால் தோற்கடிக்கப்பட்ட எதிரிகளின் பெண்கள் தங்கள் குழந்தைகள் பசியால் வாடுவதைப் பார்த்து மனம் துன்புறுகின்றனர். பசியால் வாடுகின்ற குழந்தை எட்டாத மாங்கனியைக் கேட்டு அழும் நிலை ஏற்படுகின்றது. அந்தப் பெண் தன் குழந்தையின் பசியைப் போக்குவதற்காக வழிப்போக்கர்களிடம் எட்டாத மாங்கனியைப் பறித்துக் கொடுக்குமாறு இறைஞ்சுகின்றாள். சாதாஹன மன்னனால் தோற்கடிக்கப்படுவதற்கு முன்பு செல்வச்செழிப்பில் வாழ்ந்திருந்தாலும் தோற்ற பிறகு ஒரு வேளை உணவு கூட கிடைக்காமல் காடுகளில் அலைந்து திரிகின்ற கொடூர நிலைப்பற்றிக் கூறி செல்வம் நிலையில்லாதது என்பதை கவி உணர்த்துவதிலிருந்து அறிந்து கொள்ளமுடிகின்றது. செல்வம் நிலையற்ற தன்மையை உடையது. அது யாரிடமும் நிலைத்து நிற்காது என்பதை,

**“அறுசுவை யுண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட**
**மறுசிகை நீக்கியுண் டாரும் வறிஞராய்ச்**
**சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழ்எனின் செல்வம்ஒன்**
**றுண்டாக வைக்கற்பாற் றன்று”. (நாலடி.1)**

என்று கூறுகின்றது. தன் மனைவி பரிமாற அறுசுவை உணவை மறுபிடி நீக்கி உண்டவரும் வறுமையுற்று அடுத்தவரிடம் கூழ் வேண்டி இரந்து நிற்கும் நிலை ஏற்படும். அதனால் செல்வம் என்பது நிலையில்லாதது என்பதை அறிந்து, அதை மற்றவர்களுக்கும் கொடுத்து அவர்களின் துன்பம் துடைத்து வாழுமாறு செல்வம் நிலையாமைப் பற்றி குறிப்பிடப்படுகின்றது.

குறிப்பிட்ட காலம் வரைதான் இளமை இருக்கும். பின்பு முதுமை தானே வந்துவிடும் என்று இளமை நிலையில்லாதது என்பதை நாலடி உணர்த்துகிறது.

**“மற்றறிவாம் நல்வினையாம் இளையம் என்னாது**
**கைத்துண்டாம் போழ்தேகரவாது அறஞ் செய்ம்மின்**
**முற்றி யிருந்த கனியொழியத் தீவளியால்**
**நற்காய் உதிர்தலும் உண்டு” (நாலடி.19)**

இளமை நிலையானது என்று எண்ணி முதுமையில் அறம் செய்யலாம் என்று நினைக்காமல் பொருள் இருக்கும் போதே அறம் செய்யுங்கள். காரணம் எப்பொழுது வேண்டுமானாலும் மரணம் வரலாம், அதனால் இளமை நிலையில்லாதது என்பதை உணர்ந்து இளமையில் செல்வம் இருக்கும் போதே அதை மற்றவர்களுக்கும் கொடுத்து அறம் செய்து வாழுங்கள் என்று நாலடி இளமை நிலையில்லாதது என்பதை உணர்த்துவதை அறியமுடிகின்றது. மேலும் யாக்கை நிலையில்லாதது என்பதை நாலடி பின்வருமாறு கூறுகின்றது.

**“மலமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத்**
**தலைமிசைக் கொண்ட குடையர்- நிலமிசைத்**
**துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட்டார் அல்லால்**
**எஞ்சினார் இவ்வுலகத்து இல்”.** (நாலடி.21)

மலையின் உச்சியில் தோன்றும் மதி போல யானையின் மீது அமர்ந்து வெண்கொற்றக் கொடையுடன் விளங்கிய முடிமன்னர்களும் மாண்டு போனார்கள் என்று தூற்றூவார்களே தவிர, நிலைத்து நின்றவர் இவர் என்று யாரும் சொல்லக் கூடியவர்கள் இல்லை. அதனால் உடம்பு நிலையில்லாதது என்பதை அறிந்து உயிருடன் இருக்கும் போதே தன்னால் இயன்ற அறத்தை செய்து வாழுமாறு நாலடி வலிறுத்துகின்றது. இளமை மனிதனின் வாழ்க்கையில் என்றும் நிலைத்து நிற்பதில்லை, முதுமை என்பது தானே வந்துவிடும். அதனால் மனிதனின் வாழ்நாள் மிகக் குறுகியது என்பதை உணர்ந்து தங்களுக்குள் உள்ள கொடூர எண்ணத்தை ஒழித்து மற்றவர்களுக்குத் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து வாழுங்கள் என்று காதா சப்தசதியும் நாலடியும் இளமை நிலையில்லாதது என்று உணர்த்துவதை அறியமுடிகின்றது. மிகப் பெரிய மன்னனாக செல்வச் செழிப்பில் அறுசுவை உணவை உண்டு வாழ்ந்தாலும் அவன் எதிரிகளால் தோற்கடிக்கப்படும் போது ஒரு வேளை உணவு கூட கிடைக்காமல் அடுத்தவர்களிடம் இரைஞ்சும் நிலை ஏற்படும் என்று செல்வம் நிலையில்லாதது என்பதை குறிப்பிடுவதில் இரண்டு இலக்கியங்களும் ஒத்த கருத்தைப் பதிவு செய்வது குறிப்பிடத்தக்கது.

**சான்றோர் பண்பு**

சான்றோர்கள் ஆலமரம் போன்றவர்கள் என்று உவமை மூலம் அவர்களின் பண்பு குறிப்பிடப்படுகின்றது.

**“நாட்டுக் கணியாம் நல்லோன் பிரிதல்**
**பேரால மரம் வேருடன் வீழ**
**வெட்ட வெளிபடுஞ் சிற்றூர் போலும்”** (காதா.1-94)

தன்னை நாடி வந்த பறவைகளுக்கும் மக்களுக்கும் அடைக்கலமாய் விளங்கிய ஆலமரம் சாய்ந்தால் அந்த வெற்றிடத்தை நிரப்ப முடியாதது போல சான்றோர்கள் சிறந்து விளங்கி நன்மை செய்து இறந்தால் அந்த இடத்தை யாராலும் நிரப்ப முடியாத சூனியமாகிவிடும் என்பதை காதா சப்த சதி உணர்த்துகின்றது. சான்றோர்களின் இடத்தை அவர்கள் இல்லை என்றால் யாராலும் நிரப்ப முடியாது என்று சான்றோர்களின் பண்பு போற்றப்படுகின்வது குறிப்பிடத்தக்கது. சான்றோர்களை வெளிப்படையாகப் பார்த்தால் கோபமுடையவர்களாகக் காணப்படுவார்கள். ஆனால் உள்ளத்தில் உள்ளே கோபமற்ற சிறந்த பண்புடையவர்கள் என்பதை காதாசப்த சதி,

**“முன்பனிக் காலத் தின்பெருங் குளனே**
**உட்புறங் குளிர்ந்தும் புறத்தே சுட்டும்**
**சினந்த சான்றோர் மனந்தனை யொத்த**
**நீர்அமைந் திட்ட நீர்மை என்னே!”** (காதா.2-86)

என்று சான்றோர் பண்பு குறிப்பிடப்படுகின்றது. முன்பனிக் காலத்தில் குளத்தின் நீர் மேலே சுடும், ஆனால் உள்ளே குளிர்ச்சியாக இருக்கும். அது போன்று சான்றோர் மனமும் மேலே சுடுவது போன்று கோபமாகக் காணப்பட்டாலும், உள்ளத்தின் உள்ளே அன்பினாற் குளிர்ந்து இருப்பார்கள் என்று சான்றோர்கள் பண்பு குளத்து நீருக்கு உவமையாகக் கூறப்படுகிறது. .

**“சான்றோர் பிரறை என்றுஞ் சினவார்**
**சினப்பினும் தீமை மனத்தி லெண்ணாரே**
**எண்ணினும் வெளியே இயம்பிட மாட்டார்**
**இயம்பிடின் வெட்கி இருப்பரெஞ் ஞான்றும்”** (காதா.3-50)

சான்றோர்கள் எப்பொழுதும் ஒரே மனநிலையில் தான் இருப்பார்கள் என்பதை,

**“கனிவளம் மிகினே நனிவளைந் திட்டும்**
**கனிவளம் கெடினே கடிதினில் நிமிரும்**
**நுனிமரக் கிளைபோல் நுண்ணறி வாளர்**
**தனிமனந் திகழும் தகைபெற வீங்கே”** (காதா.3-82)

என்று கூறுகின்றது. பழக்குலைகள் நிறந்த மரத்தின் நுனி வளைந்தும் அது தீர்ந்தால் நிமிர்ந்தும் காணப்படும். அது போல் சான்றோர்கள் தங்களிடம் செல்வம் உள்ளபோது அடக்கமாகவும் செல்வம் இல்லாது வறுமையுற்ற போது செம்மாந்தும் காணப்படுவர் என்று சான்றோர்களின் நல்லியல்பு குறிப்பிடப்படுகின்றது. எந்நிலையிலும் தான் உயர்ந்தவன் என்ற மனநிலையில்லாமல் அடக்கமாகவும் பணிவுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்பதை காதா சப்தசதி உணர்த்துகின்றது.

பகைவர்கள் சினந்து பேசினாலும் சான்றோர்கள் சினத்தை வெளிப்படுத்த மாட்டார்கள் என்பதை காதாசப்தசதி,

**"மிகுசினப் பகையே மேவினும் சான்றோர்**
**வாயாற் கடுஞ்சொல் வழங்குவ துண்டோ**
**பாம்பின் வாய்தான் பற்றிய போதும்**
**எழில்மதி யமுதே பொழியு மன்றே" (காதா.4-19)**

என்று கூறுகின்றது. ராகு, சந்திரனை விழுங்கும்போது கூட சந்திரன் ஒளிவீசுவது போன்று தன்னைப் பிறர் பீடிப்பினும் சான்றோர் பிறருக்குத் தீயசொல் கூறார் என்று சான்றோர்களின் பண்பு குறிப்பிடப்படுகிறது

பெரியோர் தன் மீது கீழ்மக்கள் கொடுஞ்சொற்களை வீசினாலும் தன் குடிப்பெருமையை எண்ணி பொறுமையோடு இருப்பர் என்பதை,

**"கல்லெறிந் தன்ன கயவர்வாய் இன்னாச்சொல்**
**எல்லாருங் காணப் பொறுத்துய்ப்பர் - ஒல்லை**
**இடுநீற்றால் பைஅவிந்த நாகம்போல் தத்தம்**
**குடிமையான் வாதிக்கப் பட்டு" (நாலடி.66)**

என்று கூறுகின்றது. நாகப்பாம்பு மந்திரவாதியின் மந்திரத்திற்கு கட்டுப்பட்டு தன் நச்சுப் பையைச் சுருக்கிக் கொள்ளவது போல பெரியோரும் வீணான கொடுஞ்சொற்களை கீழ்மக்கள் மீது வீசமாட்டார்கள் என்று சான்றோர்களின் அடக்கம் பற்றி குறிப்பிடப்படுகின்றது.

சான்றோர்கள் வறுமையுற்ற போதிலும் தன் நிலையிலிருந்து மாறமாட்டார்கள் என்பதை நாலடி,

**"நரம்பெழுந்து நல்கூர்ந்தார் ஆயினும் சான்றோர்**
**குரம்பெழுந்து குற்றம்கொண்டு ஏறார் - உரங்கவறா**
**உள்ளம்எனும் நாரினாற் கட்டி உளவரையாற்**
**செய்வார் செயற்பா லவை". (நாலடி.153)**

என்று கூறுகின்றது. நரம்பு தெரியக்கூடிய வகையில் உடம்பு இளைத்து வறுமையால் வாடினாலும் சான்றோர்கள் தவறான வழியில் செல்லமாட்டார்கள். எந்தச்சூழ்நிலையிலும் மன உறுதியுடன் நல்ல செயல்களையே செய்வார்கள் என்று குறிப்பிடப்பபடுகின்றது. சான்றோர்கள் வறுமையிலும் தன்நிலை மாறாமல் அறவழியில் செல்லக் கூடியவர்கள் என்பதை நாலடி உணர்த்துவதை அறியமுடிகின்றது. சான்றோர்கள் தம்மிடம் வருபவர்களை மதித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வார்கள் என்பதை நாலடி குறிப்பிடுவதை,

**"பன்னாளும் சென்றக்கால் பண்பலார் தம்முழை**
**என்னானும் வேண்டுப என்றிகழ்ப – என்னானும்**
**வேண்டினும் நன்றுமற் றென்று விழுமியோர்**
**காண்டொறுஞ் செய்வர் சிறப்பு". (நாலடி.159)**

கீழ்மக்கள் தன்னிடம் பலமுறை வருகின்றவர்களை எண்ணி இகழ்வர். ஆனால் மேன்மக்கள் தன்னிடம் வருகின்றவர்களை எண்ணி மகிழ்ந்து அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து மகிழ்வர் என்று மேன்மக்களின் பண்பு குறிப்பிடப்படுகின்றது.

தன்னை நாடி வருகின்றவர்களைக் கைவிடாமல் உள்ளம் மகிழ்ந்து அவர்கள் மேன்மையடைவதற்கான வழிகளை செய்து கொடுப்பர் என்று சான்றோர்களின் பண்பு மேன்மையானது என்று குறிப்பிடப்படுகின்றது. கொடிய குணம் கொண்டவர்கள் சான்றோர்களை சினமூட்டினாலும் சினவார் என்று நாலடி கூறுகின்றது.

**"கடுக்கி, ஒருவன் கடுங்குறளை பேசி,**
**மயக்கி விடினும், மனப்பிரிப்(பு) ஒன்(று) இன்றித்**
**துளக்கம் இலாதவர் தூய மனத்தார்,**
**விளக்கினுள் ஒண்சுடரே போன்று" (நாலடி 189)**

ஒருவன் சினமூட்டுபவனாய் கொடிய தேள் மொழிகளைப் பேசி சினமூட்டினாலும் தம் மனத்தின் சினம் தோன்றாமல் ஒளி வீசும் விளக்கின் சுடரைப்போன்று தூயமனதினராய் இருப்பர் சான்றோர் என்று சான்றோரின் தூயமனத்தை நாலடி எடுத்துரைக்கின்றது. சான்றோர்கள் தங்களை நாடி வருகின்றவர்களை இகழாமல் அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து அடைக்கலம் கொடுப்பார்கள் என்றும், செல்வம் இருக்கும் காலத்தில் அடக்கமாகவும் இல்லாது வறுமையுற்ற காலத்தில் செம்மாந்து காணப்படுவார்கள் என்றும் எந்தச் சூழலிலும் தவறான வழியைத் தேர்ந்தெடுக்க மாட்டார்கள் அறவழியை மட்டுமே தேர்ந்தெடுப்பார்கள் என்பதை இரண்டு இலக்கியங்களின் வழி அறியமுடிகின்றது. காதாசப்தசதியில் குளத்தின் நீர் மேற்பரப்பில் சூடாக இருந்தாலும், உள்ளே குளிர்ச்சித் தன்மையுடையதாய் இருப்பது போன்றும், ராகு சந்திரனை விழுங்கும் போது கூட ஒளி வீசுவது போன்றும் சான்றோர்கள் தூயமனதினராய் திகழ்வார்கள் என்று காதாசப்தசதி குறிப்பிடுகின்றது. தீயவர்கள் எவ்வளவுதான் சினமூட்டினாலும் தன்னுடைய சினத்தைப் பதிலுக்கு வெளிப்படுத்த மாட்டார்கள் என்று காதாசப்தசதியில் கூறுவது போன்றே நாலடியிலும் சிறுமைக் குணம் படைத்தவர்கள் தங்களை எந்த வகையில் சினமூட்டினாலும் அதைக் கண்டு வெறுப்புற்று சினமூட்டியவர்கள் மேல் பதிலுக்கு சினத்தை வெளிப்படுத்தாமல் விளக்கின் சுடரைப் போன்று தூயமனதினராய் காணப்படுவார்கள் என்று சான்றோர்களின் பண்பு கூறப்படுகின்றது. சான்றோர்கள் எந்த வகையிலும் களங்கம் இல்லாது தூய மனதுடையவராய் திகழ்வார்கள் என்று இரண்டு இலக்கியங்களும் சான்றோர் பண்புகளைப் போற்றுவதை அறிய முடிகிறது.

**நட்பு**

நண்பர்களைத் தேர்ந்தெடுக்கும் நிலையில் கவனமுடன் செயல்பட வேண்டும் என்பதை காதா சப்தசதி உணர்த்துகின்றது.

**“அன்போ டாதர வளித்தும் அற்பர்**
**எண்ணெய் ஊற்ற எரிவிளக் கதுதான்**
**மாசுடைக் கரிப்புகை வீசல் போல**
**விரைவிற் களங்கம் விளவிப் பாரே”** (காதா.2-35)

விளக்கில் எண்ணெய் ஊற்றி எரிக்கும் போது அது புகையைக் கக்கி மாசுண்டாக்குவது போல நல்லவர்கள், அற்பர்களுக்கு ஆதரவு அளித்தால் அற்பர்கள் ஆதரவு அளித்தவர்களின் வீட்டிலேயே கேடு உண்டாக்கி ஒடி ஒளிந்து கொள்வார்கள் என்று அற்பர்களின் அற்பப் புத்205அ ட்றி குறிப்பிடப்படுகின்றது. நட்பு கொள்ளும் போது அந்த நட்பின் உண்மைத் தன்மையை அறிந்து நட்பு கொள்ள வேண்டும். இல்லையென்றால் அந்த நட்பே கேடாக அமைந்துவிடும் என்பதை காதா சப்தசதி உணர்த்துவதை அறியமுடிகின்றது. சான்றோரின் நட்பை பெறவும், தீயோரின் நட்பை வெறுக்கவும் வேண்டும் என்பதை,

**“புகழ்மிகு மறிவும் பொற்புறு குணங்களும்**
**உடைய மாந்தரின் உறுபகை மேலாம்**
**இகழ்மிகு மிழிதகை யியல்புடை யோரின்**
**நட்பு நமக்கே வெட்கம் தருமே!”** (காதா.3-67)

என்று கூறப்படுகின்றது. புகழ் மிகுந்த அறிவும் நல்ல குணமுடைய மக்களின் பகை சிறந்தது. இகழத்தக்க இழிதகையாரின் நட்பு கொள்வது சிறப்பின்மையோடு, நாணத்தயும் உண்டாக்கும். சுான்றோர்கள் பகைவர்களாகயிருந்தாலும் அதனால் கேடு இல்லை. கீழ்மக்கள் நண்பர்களாகயிருந்தாலும் அது நாணக்கூடிய செயல், அதை வெறுப்பது சிறப்பு என்று நல்லோர்களிடம் நட்பு கொள்வது பற்றியும் தீயவர்களிடம் நட்பு கொள்வது பற்றியும் குறிப்பிடப்படுகின்றது. மேலும் நல்லோர்களின் நட்பு, தீயோர்களின் நட்பு பற்றி கூறும் நிலையில்,

**“தீயோர் நட்பு நீர்மே லெழுத்தாய்**
**மேய பொழுதே மரபு மாயு மாங்கே**
**தூயோர் நட்பு தொடருங் காலை**
**ஏய கல்மேல் எழுத்தா கும்மே”** (காதா.3-72)

என்று குறிப்பிடப்படுகின்றது. தீயோரின் நட்பு நீர் மேல் எழுத்துப் போல் ஒரு கணப்பொழுதும் நிற்காமல் அழிந்துவிடும். தூயவர்களின் நட்பு கல்மேல் எழுத்துப்போல் நிலையாக என்றும் நிலைத்து நிற்கக் கூடியது என்று கூறப்படுகின்றது. நல்லவர்களின் நட்பு நிலையானது என்றும் தீயவர்களின் நட்பு நிலையில்லாதது என்று நட்பின் உண்மைத் தன்மையை தெளிவாகக் காதா சப்தசதி எடுத்துரைப்பதை அறியமுடிகின்றது. துவிர கீழோர் நட்பு இனிமையில்லாதது துன்பம் தரக்கூடியது என்று கூறப்படுகின்றது,

**"நாவிலினிமை நல்கி உள்ளே**
**மேவிச் செயலற் றமைந்து மேலும்**
**துயர்தரச் சுவைதரும் இயல்பின தாய**
**கரும்பு போல்வர் கயவரு மீங்கே" (காதா.6-41)**

கரும்பைக் கடிக்கும் போத இனிமை தரும், அதுவே உள்ளே சென்றதும் இனிமையிராது. மேலும் கரும்பை பல்லால் கடித்தும், ஆலையிலிட்டும் அரைத்தால் மட்டுமே சாறு கிடைக்கும். அதுபோல கீழான மக்கள் நாவினால் இனிய சொற்களைச் சொல்லுவார்களேயன்றி உள்ளத்துள் தீமையை எண்ணியிருப்பர். கீழ்மக்களிடமிருந்து எதையும் பெறவேண்டுமானால் அவர்களைத் துன்புறுத்தினால் மட்டுமே பெறமுடியும் என்று கீழோர்களிடம் வைக்கும் நட்பு கரும்பிற்கு உவமையாக் கூறப்பட்டுள்ளது. மேன்மக்கள், கீழ்மக்கள் நட்பு பற்றிக்கூறும் நாலடி,

**கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை யெஞ்ஞான்றும்**
**குரத்திற் கரும்பு தின்றற்றே – குரத்திற்கு**
**எதிர் செலத்தின் றன்ன தகைத்தரோ என்றும்**
**மதுர மிலாளர் தொடர்பு (நாலடி. 211)**

என்று குறிப்பிடுகின்றது. மேன்மக்கள் நட்பானது கரும்பை நுனியிலிருந்து தொடங்கி அடிக்கரும்பு வரை சுவைப்பது போன்று இனிமை தருவது என்றும் கீழ்மக்கள் நட்பானது அடிக் கரும்பிலிருந்து தொடங்கி நுனிக்கரும்பு வரை சுவைப்பது போன்று சுவையற்றதாக இருக்கும் என்று குறிப்பிடப்படுகின்றது. மேன்மக்கள் நட்பானது தொடக்கத்தில் இனிமையில்லாததாக இருந்தாலும் பழகப் பழக இனிமை கூடுவது என்றும், கீழ்மக்கள் நட்பானது தொடக்கத்தில் இனிமையுடையதாக இருந்தாலும் பழகப் பழக இனிமையில்லாததாகக் காணப்படும் என்று குறிப்பிடப்படுகின்றது. மேன்மக்கள் நட்பின் மேன்மைப்பற்றியும் கீழ்மக்கள் நட்பின் சிறுமைப்பற்றியும் நாலடி எடுத்துரைப்பது யாரிடம் நட்புக் கொள்ளவேண்டும் என்பதற்கு வழிகாட்டுவதாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. மேலும் நட்பு பற்றி கூறும் நாலடி,

**"யானை யனைவர் நண்பொரீஇ நாயனையார்**
**கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும் - யானை**
**அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்**
**மெய்யதா வாழ்குழைக்கும் நாய்" (நாலடி. 213)**

யானை தன்னை வளர்த்த பாகனையே கொல்லும், அதனால் யானையைப் போன்று வஞ்சனை உள்ளம் படைத்தவர்களின் நட்பை நீக்க வேண்டும். நாய் நன்றியுணர்வுடன் செயல்படும். தன்மீது வேல் எறிந்தவனாயிருந்தாலும் நாய் தன்னை வளர்த்தவனிடம் வாலை ஆட்டிக்கொண்டும் குழைத்துக் கொண்டும் நிற்கும். ஆதனால் வஞ்சனை உள்ளம் கொண்டவனின் நட்பை அறிந்து நீக்கி, நாய் போன்ற நன்றியுணர்வுள்ளவனின் நட்பை பெறவேண்டும் என்று நட்பை தேர்ந்தெடுப்பது குறித்து நாலடி கூறுவதை அறியலாம்.

நட்பு என்பது நீண்ட நாள் நீடிக்கக் கூடியது என்பதை அறிந்து நட்புக் கொள்ள வேண்டும் என்று நாலடி உணர்த்துகின்றது.

**"மரீஇப் பலரோடு பன்னாள் முயங்கிப்**
**பொரீஇப் பொருட்டக்கார்க் கோடலே வேண்டும்**
**பரீஇ உயிர் செகுக்கும் பாம்பொடும் இன்னா**
**மரீஇஇப் பின்னைப் பிரிவு" (நாலடி. 220)**

பலரோடு பல நாள் பழகிப் பார்த்துப் பிறகு தான் யாரிடம் நட்புக் கொள்ள வேண்டும் என்பதை முடிவு செய்து நட்புக் கொள்ள வேண்டும். காரணம் பாம்பு போன்ற கொடிய விஷத்தன்மை உள்ளவர்களுடன் பழகிப் பின்பு பிரிவது துன்பத்தையே தரும் அதனால் பழகும்போது யாருடன் பழக வேண்டும் என்பதை அறிந்துகொள்ளும் திறன்வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. நல்லோரின் நட்பு தீயோரின் நட்பு பற்றிக் குறிப்பிடும் நாலடி,

**“சீரியர் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்**
**மாரிபோல் மாண்ட பயந்ததாம் - மாரி**
**வறத்தக்காற் போலுமே வாலருவி நாட!**
**சிறந்தக்காற் சீரிலார் நட்பு” (நாலடி. 232)**

என்று குறிப்பிடுகின்றது. நல்லோர்களின் நட்பு நல்ல மழை பெய்தது போல மகிழ்ச்சி தருவதாகும். கீழோர்களின் நட்பானது மழையில்லாத வறட்சிக்காலம் போன்று துன்பம் தருவதாகும். ஆதனால் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு நல்ல நட்பைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இல்லையென்றால் வாழ்க்கையில் துன்பம் மட்டுமே மிஞ்சும் என்பதை நாலடி வழி அறியமுடிகின்றது. நட்பில் சொர்க்கம் நரகம் உண்டு என்பதை நாலடி பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

**“நுண்ணுணர்வி னரொடு கூடி நுகர்வுடைமை**
**விண்ணுலகே ஒக்கும் விழைவிற்றால் - நுண்ணூல்**
**உணர்வில ராகிய ஊதியம் இல்லார்ப்**
**புணர்தல் நிரயத்துள் ஒன்று”. (நாலடி. 233)**

சிறந்த, நுண்ணறிவுடையவர்களோடு பழகுவது என்பது தேவலோகத்தில் இருப்பது போன்று இன்பத்தைத் தருவது என்றும் அத்தைகைய அறிவில்லாதவர்களிடம் பழகுவது என்பது நரகத்தில் இருப்பது போன்று துன்பத்தைத் தருவது என்றும் குறிப்பிடப்படுகின்றது. நல்லவர்களின் நட்பு சொர்க்கம் போன்றது என்றும், தீயவர்களின் நட்பு நரகம் போன்றது என்றும் குறிப்பிடுவதை அறிய முடிகின்றது. சொர்க்க, நரக வாழ்க்கையை அனுபவிப்பது அவரவர் நட்பைப் பொறுத்தது என்று கூறுவது மிகச் சிறப்பாக உள்ளது. நட்பு பற்றிக் குறிப்பிடும் நிலையில் கீழோரின் நட்பானது கரும்பு போன்று ஆரம்பத்தில் இனிமையாகவும் பிறகு சுவை குறைந்தும் இருக்கும் என்றும் கரும்பை ஆலையிலிட்டு ஆட்டுவது போன்று அவர்களின் நட்பினால் துன்பம் தான் என்றும் அவர்களிடமிருந்து எந்த நல்ல செயல்களையும் பார்ப்பது அரிது என்றும் காதா சப்தசதி குறிப்பிடுகின்றது. காதா சப்தசதி போன்றே நாலடியும் நட்பிற்குக் கரும்பைச் சான்றுகாட்டுகின்றது. சிறந்த நட்பு கரும்பை நுனியிலிருந்து, அடிவரை சாப்பிடுவது போன்றது என்றும் கீழ்மக்களின் நட்பு கரும்பை அடியிலிருந்து நுனிவரை சாப்பிடுவது போன்றது என்றும் நாலடி குறிப்பிடுகின்றது. நட்பிற்கு இரண்டு இலக்கியங்களும் ஒரே பொருளை உவமையாகக் காட்டுவதுடன் ஒரே கருத்தை கூறுவதும் குறிப்பிடத்தக்கது. தீயவர்களுடன் நட்பு கொண்டால் அவர்கள் நட்பு கொண்டவன் வீட்டிற்கே கெடுதலை உண்டாக்குவார்கள் என்று காதா சப்தசதி குறிப்பிடுவது போன்றே யானை வளர்த்த பாகனையே கொல்லும் என்று நாலடி குறிப்பிடுவதிலிருந்து நட்பானது சிறந்தவையாக இருக்க வேண்டும் இல்லை என்றால் அதனால் கேடு உண்டாகும் என்பதை இரண்டு இலக்கியங்களும் ஒத்தக் கருத்தைப் பதிவு செய்வதை அறியமுடிகின்றது. தீயவர்களின் நட்பானது நீர் மேல் எழுத்துப் போல் என்று காதா சப்தசதி குறிப்பிடுவது போன்று நாலடியும் நல்லவர்களின் நட்பானது மழை பெய்வது போன்று என்றும் தேவலோகத்தில் இருப்பது போன்று என்றும் குறிப்பிடுகின்றது. சிறந்த நட்பு என்றும் நிலைத்து நிற்கக் கூடியது, மகிழ்ச்சியைத் தரக்கூடியது என்பதை இரண்டு இலக்கியங்களும் பதிவு செய்வது குறிப்பிடத்தக்கது.

## முடிவுரை

இளமை நிலையில்லாதது முதுமை வருவதற்குள் மற்றவர்களுக்குத் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து வாழுங்கள், வாழ்கின்ற நாளில் அடுத்தவர்களைத் துன்பப்படுத்தாதீர்கள் என்றும் செல்வம் என்பது யாரிடமும் நிலைத்து நிற்காது. அரசனாகயிருந்தாலும் ஒரு நாள் அடுத்தவர்களிடம் ஒரு வேளை உணவுக்காக இரைஞ்சும் நிலை ஏற்படும் என்பதை காதா சப்தசதியும் நாலடியும் உணர்த்துவது குறிப்பிடத்தக்கது. சான்றோர்கள் தங்களை நாடி

வருகின்றவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கக்கூடியவர்கள், அவர்கள் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது என்றும் செல்வம் இருக்கும் போது அடக்கத்துடனும் அது இல்லாத போது செம்மாந்தும் காணப்படுவார்கள் என்றும், கீழ்மக்கள் சினமூட்டினாலும் சினம்கொள்ளாமல் பொறுமையடன் நடந்து கொள்வார்கள் என்பதை இரண்டு இலக்கியங்களும் பதிவுசெய்வதில் ஒத்துப்போவது குறிப்பிடத்தக்கது. நட்பு பற்றி குறிப்பிடும் நிலையில் இரண்டு இலக்கியங்களும் நட்பிற்குக் கரும்பை உதாரணம் காட்டி கருத்துக்களை விளக்குவது குறிப்பிடத்தக்கது. நல்லவர்களின் நட்பானது என்றும் நிலைத்து நிற்கக்கூடியது மிகுந்த மகிழ்ச்சியைத் தரக்கூடியது என்றும் நட்புக் கொள்ளும் போது அது பல நாள் நீடிக்கக் கூடியது என்பதை உணர்ந்து யாரிடம் நட்புக் கொள்ள வேண்டும் என்பதை அறிந்து நட்புக் கொள்ளவேண்டும் என்பதில் இரண்டு இலக்கியங்களும் ஒத்தக்கருத்தை முன் வைப்பது குறிப்பிடத்தக்கது. காதா சப்தசதிக்கு அடுத்த காலக்கட்டத்தில் நாலடி தோன்றினாலும் காதா சப்தசதியில் கூறப்படும் அறக்கருத்துக்கள் நாலடியிலும் சமண முனிவர்களால் கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இரண்டு இலக்கியங்களும் மக்கள் வாழ்கின்ற குறுகிய காலத்தில் அடுத்தவர்களைத் துன்பப்படுத்தாமல் மற்றவர்களுக்கு உதவி செய்து வாழுங்கள் என்ற அறச்சிந்தனையை போதிப்பதை அறியமுடிகின்றது.

**பயன்படுத்திய நூல்கள்**

1. அருணா, (உ.ஆ), நாலடியார், அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2012.
2. அறவாணன், க.ப, அற இலக்கியக் களஞ்சியம்.
3. திருநாவுக்கரசு, க.த. திருக்குறள் நீதி இலக்கியம். சென்னைப் பல்கலைகம், சென்னை, 1977.
4. ஜகந்நாத ராஜா, மு.கு. காதா சப்தசதி, விசுவசாந்தி பதிப்பகம், இராஜாபாளையம், 1982.